# பூரணை தீபம்



அமரர்

## காசிப்பிள்ளை அன்னபூரணம்

அவர்களின்

## நினைவு வெளியீடு

**02-03-2018**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீசாலையைப் பிறப்பிடமாகவும் நுணாவில், டென்மார்க், இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி காசிப்பிள்ளை அன்னபூரணம்

அவர்கள் சிவபதப்பேறெய்தியமை குறித்த

# நினைவு வெளியீடு

## 02-03-2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

குடும்பக் குலவிளக்காய்
கொண்டவன் விரும்பும் மனைவியாய்
பிள்ளைகளின் பாசமிகு அன்னையாய்
பேரப்பிள்ளைகள் வாஞ்சை பாராட்டும் பாட்டியாய்
பூட்டப்பிள்ளைகளுக்கு பூட்டியாய்
சொந்தங்கள் நாடிவரும் அன்பின் உருவமாய்
ஊரவர் போற்றும் உத்தமியாய்
பார் புகழும் திலகமாய்
வாழ்ந்து மறைந்த
எமது அன்புத் தெய்வத்திற்கு
பூரண தீபமாகிய இம்மலரை
விழிநிறைந்த கண்களுடே
சமர்ப்பணம் செய்கின்றோம்.

*பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரர்கள், பூட்டர்கள்,*
*குடும்பத்தினர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் காசிப்பிள்ளை அன்னபூரணம்

முகிழ்ப்பு
08-10-1931

அவிழ்ப்பு
31-01-2018

## திதி நிர்ணய வெண்பா

ஏவிளம்பி வருடம் தைத்திங்கள் தனிலே
பூண்ட நன்னாள் பூர்வபக்க பூரணையில்
நன்மங்கை காசிப்பிள்ளை அன்னபூரணம்
சென்றடைந்தாள் ஈசனிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் துணை



# காயத்ரீ மந்திரம்

'ஓம் பூர் புவஸ் ஸுவ :
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்க்க தேவஸ்ய தீமஹி
தியோ யோந : ப்ரசோத யாத்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரத்திரட்டு



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

வாக்குண்டாம் நல்லமனம் உண்டாம் மாமலரான்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

## தேவாரம்

திருவாக்குங் செய்கருமங் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்குமுருவாக்கும்
ஆதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்று அரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

## திருவிசைப்பா

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூறாயிரங் கூறிட்(டு)
அத்திலங் கொருகூ(று) உன்கண்வைத் தவருக்(கு)
அமருல களிக்கும்நின் பெருமை
பித்தனென் றொருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேத்தரத்தானே.

## திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்ற(ம்) முற்றும்
எமக்கமுதானம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன்சீர்
அடியார் அடிதாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மை யாமெனின் உலகர்முன் வருகவென உரைப்பார்.

## திருப்புகழ்

**கைத்தல நிறைகனி யப்பமோ டவல்பொரி**
**கப்பிய கரிமுகன் அடிபேணிக்**
**கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ**
**கற்பக மெனவினை கடிதேகும்**
**மத்துமு மதியமும் வைத்திடும் அரன்மகன்**
**மற்பொரு திரள்புய மதயானை**
**மத்தள வயிறனை உத்தமி புதல்வனை**
**மட்டவிழ் மலர்கொடு பணிவேனே**
**முத்தமிழ் அடைவினை முற்படு கிரி தனில்**
**முற்பட எழுதிய முதல்வோனே**
**முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்**
**அச்சது பொடிசெய்த அதிதீரா**
**அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்**
**அப்புன மதனிடை இபமாகி**
**அக்குற மகளுடன் அச்சிறு முருகனை**
**அக்கண மணமருள் பெருமாளே.**

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# அமரர் காசிப்பிள்ளை அன்னபூரணத்தின் வாழ்வுத்தடம்

## 1931-10-08 தொடக்கம் 31-01-2018 வரை

வளம் கொழிக்கும் மீசாலை வாழ் சைவ உயர் வேளாண் குலத்தைச் சேர்ந்த சீமான் பொன்னையாவுக்கும் தங்கம்மாவிற்கும் குலம் தழைக்க வந்துதித்த முத்துக்கள் அண்ணன் சரவணமுத்துவும் அன்னபூரணமும் ஆவர். தாய், தந்தை, சுற்றத்தாரின் சிறப்பான வழிகாட்டலில் மிகவும் கண்ணியமாகவும், நல்லறிவுடனும் தமையனும் தங்கையும் வாழ்ந்து வந்தார்கள்.

இவர்களின் சிறப்புக்களை நன்கறிந்த நுணாவில் வாழ் உயர் வேளாண்குலத்திலகம் கதிரவேலு மனைவி செல்லாச்சியும் தமதருமை மகனான காசிப்பிள்ளைக்கு திருமணம் செய்து வைத்தார்கள். காசிப்பிள்ளை, அன்னபூரணத்தின் இல்லற வாழ்வில் விளைந்த இரத்தினாங்கள் எட்டு. அவர்களில் மூவர் ஆண்கள், ஐவர் பெண்கள்.

"மாங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு".

அதாவது மனைவியின் நட்பண்பே இல்லற வாழ்க்கைக்கு மங்கலம். நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு நல்லணிகலம் என்கிறார் பொய்யாமொழியான் திருவள்ளுவர் பெருமான். இப் பொய்யாமொழிக்கு அமையவே அம்மையாரும் வாழ்ந்து காட்டிப் போந்துள்ளார் என்பது அவரின் வாழ்வுத் தடத்தினூடே உணர்கின்றோம்.

கணவன், பிள்ளைகளோடு நீர்வளமும் நிலவளமும் அமையப் பெற்று கன்நெலும், செந்நெல்லும் விளையும் இராமநாதபுரத்தை மேவிக் கொண்டனர். அங்கு மாவடி அம்மன் அருளால் வேளாண்மையிலும், சமூக, சமயத் தொண்டுகளாலும் மிகவும் உச்சம் பெற்று வாழ்ந்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப்பகுதியில் தமது மூத்தமகள் அன்னலட்சுமியை மக்கள் வங்கியில் கடமையாற்றும் பெரியதம்பிக்கு மணமுடித்து வைத்தார்கள். கணவர் இறந்த பின்பும் அவர் கைதடி - நுணாவிலில் வாழ்ந்து வருகிறார்.

மூத்தமகனாம் இராமலிங்கம் சிறு வயதில் தந்தை காலமாகிய பின் கல்வி கற்கவேண்டிய வயதில் குடும்பச் சுமையை தன் தலைமேல் சுமந்து சகோதர சகோதரிகளை நல்வழிப்படுத்தி வாழ்ந்து வந்தார். பின் உறவுவழி நல்நங்கை தவமணியை கரம்பிடித்து பெற்ற செல்வங்கள் அறுவர். இவர்களை கல்வி கேள்விகளில் பார்மெச்சுமளவிற்கு ஆளாக்கியுள்ளார்கள். குறிப்பாக மூத்தபேரன் சயந்தன் சிறு பிராயந்தொட்டு வெளிநாடு (டென்மார்க்) செல்லும் வரை பேர்த்தி அன்னபூரணத்தின் அரவணைப்பில் வளர்ந்தான் என்றால் அது சாலப்பொருந்தும்.

மூன்றாவதாக பிறந்த சாந்தநாயகி சபாரத்தினத்தை கரம்பிடித்து வந்துதித்த செல்வங்கள் தான் சிந்துஜா, ஜனந்தினி. அன்னபூரணம் அம்மையார் இவர்களை மகள், மருமகனாக, பேரப்பிள்ளைகளாகப் பெற என்ன தவம் செய்தாரோ; அவரது தள்ளாடாத முதுமைக்காலம் முழுவதும் அவர்கள் அரவணைப்பில் வாழ்ந்தார்.

நான்காவதாக அன்னபூரணத்திற்கு குடும்ப முன்னேற்றத்திற்கும் ஊர் முன்னேற்றத்திற்கும் உழைத்த வன்னியசிங்கம் சிவாஜினியை மணம்முடித்து இராமநாதபுரத்தில் வாழ்ந்து வருகிறார். இவர்கள் பெற்ற பிள்ளைகள் மூவரில் இரண்டு ஆண்கள், பெண்ணொருவர்.

ஐந்தாவதாக வந்துதித்த மகேஸ்வரியோ பாலசுப்பிரமணியத்தை கரம்பிடித்து சுவிஸ் தேசத்தில் பபிதா என்ற மகளுடன் வாழ்ந்து வருகிறார்.

அன்னபூரணம் அம்மையார் சுவிஸ் நாட்டில் தனது ஆறாவது மகள் ராதா (முன்னாள் ஆசிரியை, இராமநாதபுரம் ம.வி), மருமகன் சந்திரகாந்த னுடன் சிறிது காலம் வாழ்ந்து அபிலாஷ் என்ற பேரப்பிள்ளையையும் கண்டின்புற்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையமகன் சண்முகலிங்கமோ தாய் மேல் தணியாத அன்பு கொண்டிருந்தார். இவர் மனைவி விஸ்வமதியைக் கரம்பிடித்து டென்மார்க்கில் மகள்மார் சகானா, சாரங்கியுடன் வாழ்ந்துவரும் வெளை தனதருமைத் தாயாரை சில வருடங்கள் டென்மார்க்கிற்கு அழைத்து குடும்பத்தோடு மகிழ்ந்திருந்தார். அதுமட்டுமன்றி அந்திமகாலங்களில் அடிக்கடி தாயிடம் வந்து வாஞ்சை பாராட்டியுள்ளார்.

இளையமகள் இராஜேஸ்வரி யோககுமாரை மணந்து பெற்ற செல்வங்களான மிதுஷன், மீறன், அபிராமியுடன் டென்மார்க்கில் வாழ்கின்றார்.

இவ்வாறாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்துள் உறைந்த அம்மையார் அன்னபூரணம் நித்திய சாந்தியடைய பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உறவினன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் திருமுறை

## (திருவாசகம், திருக்கோவையார்)

### மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச் செய்தது

## திருவாசகம்

### திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக் கி
அல்லலறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் என்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

### சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள்வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமமாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார்பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவுறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்ற
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# கந்தசஷ்டி கவசம்

## காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம்
நெஞ்சில் பதிப்போர்க்கு செல்வம் பலித்துக்
கதித்தோங்கும் நிஷ்டையும் கைகூடும்
நிமலனருள் கந்த சஷ்டி கவசம் தனை.

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக்கு குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிங்கிணி ஆட
மையல் நடம் செய்யும் மயில்வாகனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலால் எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலன் நித்தம் வருக
சிரகிரி வேலன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளிரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செய் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையம்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செம்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இரு தொடை அழகும் இணைமுழந் தாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்(று)
உன்திரு வடியை உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து உன் இணையடி காக்க
என்னுயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடி இணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டு கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடிணினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனம் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டுக்
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தனலெரி தணல் அதுவாக
விடுவிடு வேலை வெருண்டு அதுஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து உயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக்கு அருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்து தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்து உறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே
காரார் கழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான் உனைப் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவள் ஆமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என்மீதுன் மனம்மகிழ்ந்து அருளித்
தஞ்சம் என்றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்து ஆறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய
அட்டதிக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்த்தங்கு அருளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்து எனது உள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்து உணவாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத்து ஆட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நடம் இடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

கந்தஷஷ்டி கவசம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கேதார கௌரி காப்பு



## விநாயகர் துதி

முன்னின்று செய்யும் முறையாய்ப் புனைவதற்கு
என்னின்றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்றமொடு பொருட் குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்பாள் தாயாளே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தரமுகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசூரனை கூறுபோட்டவளே
அசுரக்குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனை நினைத்தல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனை அணைத்தே அருள்மாரி பொழிந்தானே.
வகையாற்றுப் படலமிதை வழிவழியாக காட்டுவீர்
நெறியறியாது திகைப்போருக்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளுந் தேவியளே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடுசெழிக்க வென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளையற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியளே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளி மகாதேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும்நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பியணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்த கௌரி அம்மா
காப்புப் கட்டிவிட்டுக் கடமைமுடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புப் கட்டதனில்
பூவும் நீறுமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடவே
ஞானச் செழும்சுடரே காளியுன்னைக் காண்கின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு காளியுன்னைக் காண்கின்றேன்.
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்த கண்திறந்து காட்டுமடி
சொல்லற்கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவொடு விரதமிரு
பக்திமனதுடனே பரவி அணிவோர்க்கு
சித்தியெலாம் தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால முணர்வுமுண்டு
எச்சகத் திலோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
பொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி யெல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரி காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வரமுன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியளே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்

"அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விழிநீர் அஞ்சலி

அமரர்

காசிப்பிள்ளை அன்னபூரணம்

அன்பு கொண்ட உங்கள் உயிர்
எமை விட்டுப் போனதே..!
ஆலமரம் சாய்ந்ததால் விழுதுகள்
இங்கு வாடுகின்றதே
இனிய உங்கள் அன்புக்குரல்
நிதம் எம் காதில் ஒலிக்கின்றதே...


கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
00
10
1931

விண்ணில்
31
01
2010

அமரர்

காசிப்பிள்ளை அன்னபூரணம்

இராமநாதபுரம், கிளிநொச்சி

அன்பையும் அறிவையும்
அரவணைப்புடன் தந்தவர் நீர்!
அவனியில் எமை தவிக்கவிட்டு
அமைதியாய் சென்றதேனோ?
இப்புவியில் யாம் நிலைத்தால்
என்று நாம் ஆறுதல் கொள்வோம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

க.சரஸ்வதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
20
08
1933

விண்ணில்
01
01
2018

அமரர்

## காசிப்பிள்ளை அன்னபூரணம்

இராமநாதபுரம், கிளிநொச்சி

அன்பு எனும் அரவணைப்பில்
அறிவு எனும் ஆற்றலில்
தீங்குதனை விரும்பாது
எல்லோருக்கும் வழிகாட்டியாய்
இருந்த அன்புத் தெய்வமே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும்
எங்கள் நெஞ்சை விட்டகலாது

**அன்னாரின் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கும்**

மருத்துவர் ந. ஜெயராசா குடும்பத்தினர்
அம்பிகை வைத்திய நிலையம்
வட்டக்கச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

மலர்வில்
08
10
1931



உதிர்வில்
01
01
2010

அமரர்

# காசிப்பிள்ளை அன்னபூரணம்

இராமநாதபுரம், கிளிநொச்சி

அன்பையும் அறிவையும்
அரவணைப்புடன் தந்தவர் நீர்!
அவனியில் எமை தவிக்கவிட்டு
அமைதியாய் சென்றதேனோ?
இப்புவியில் யார் நிலைத்தார்
என்று நாம் ஆறுதல் கொள்வோம்

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்**

நடராசா புவனேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்மொழிகள்

1. தன் தாயை நெருங்க வேண்டும் என்று அடிமேல் அடியெடுத்து வைத்துவரும் குழந்தையிடம் உள்ள பொறுமையும், விடா முயற்சியும் ஒருவருக்கு வந்துவிட்டால் அதன்பின் மந்திரம், தந்திரம், உண்மை, போலி என்பதெல்லாம் பகுத்தறியும் தன்மை வந்துவிடும்.

2. அகம்பாவம் ஒரு பொல்லாத குதிரை. அது தன் எஜமானை ஒரு முறையாவது கீழே தள்ளாமல் விடாது.

3. எப்போதும் அச்சத்தில் இருப்பதைவிட ஆபத்தை ஒருமுறை சந்திப்பது மேல்.

4. நல்லவாய்ப்பு பறந்தவண்ணம் இருக்கிறது. எவர் பிடிக்கிறாரோ அதை அவர் அடைகிறார்.

5. பஞ்சபூதங்களின் ஆற்றலை உணர்வது தான் ஆன்மீகம். பஞ்சபூதங்கள் இயற்கையானவை. இயற்கை சக்திக்குக் கட்டுப்பட்டவை கட்டுமீறினால் இந்த உலகமே அழிந்துவிடும்.

6. அடுத்தவரைத் தான் குறை சொல்லும்போது இனிப்பாக இருந்த பேச்சும் உணர்வுகளும் தன்னைப்பற்றி மற்றவர் குறை சொல்லுரம்போது கசப்பது ஏன்? அது தான் அனுபவம் தரும் பாடம். அந்த அனுபவத்தைத் தருவது தான் உன்னுள் உள்ள ஆன்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு...

பிறக்கும்போது தாயை அழவைக்கிறோம்.
இறக்கும்போது எல்லோரையும் அழவைக்கிறோம்.
வாழும்போதாவது எல்லோரிடமும் சிரிக்கப் பழகுவோம்.

நீ தனிமையில் இருக்கும்போது உனக்கு என்ன என்ன தோன்றுகிறதோ
அதுதான் உன் வாழ்க்கையைத் தீர்மானிக்கும்.

— **விவேகானந்தர்**

வெற்றி என்பது நிரந்தரமல்ல;
தோல்வி என்பது இறுதியானதுமல்ல!

ஒரு நொடி துணிந்தால் இறந்துவிடலாம்;
ஒவ்வொரு நொடியும் துணிந்தால் நாம் ஜெயித்து விடலாம்.

நல்ல முடிவுகள் அனுபவத்திலிருந்து பிறக்கின்றன.
ஆனால் அனுபவமோ தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது.

— **பில் கேட்ஸ்**

சிக்கல்கள் என்பவை ஓடும் ரெயிலிலிருந்து பார்க்கும் மரங்களைப் போன்றவை. அருகில் போனால் அவை பெரிதாகத் தெரியும். அவற்றைக் கடந்து சென்றால் அவை சிறிதாகிவிடும். இதுதான் வாழ்க்கை

விட்டுக் கொடுங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.
தட்டிக் கொடுங்கள்; தவறுகள் குறையும்.
மனம் விட்டுப் பேசுங்கள் அன்பு பெருகும்.

நட்பு எனும் கலையானது ஒரு நல்ல இசைக் கருவியை வாசிப்பது போன்றது. முதலில் விதிகளின்படி இந்தக் கருவியை வாசிக்கத் தொடங்க வேண்டும். பிறகு விதிகளை மறந்துவிட்டு இதயத்திலிருந்து வாசிக்க வேண்டும்.

கடவுள்
நகைச்சுவையுடன் எழுதக்கூடிய ஒரு சிறந்த எழுத்தாளர். ஆனால் அவர், நகைச்சுவையுடன் நடிக்கத் தெரியாத மோசமான நடிகர்கள் பலரைக் கொண்டு தன் நாடகத்தை நடத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரின் சுவாசம் மூச்சு; கண்களின் சுவாசம் கனவு.
இதயத்தின் சுவாசம் துடிப்பு, நாக்கின் சுவாசம் பேச்சு.
என் நட்பின் சுவாசம் நீ.

வெற்றி என்பது நிரந்தரமல்ல.
தோல்வி என்பது இறுதியானதுமல்ல. அதனால்
வெற்றிக்குப் பிறகு தொடர்ந்து உழைப்பதை நிறுத்த வேண்டாம்.
தோல்விக்குப் பிறகு தொடர்ந்து முயல்வதை நிறுத்தவேண்டாம்.

கண்களைத் திறந்து பார் அனைவரும் தெரிவார்கள்.
கண்களை மூடிப்பார் எனக்குப் பிடித்தவர்கள் மட்டும் தெரிவார்கள்.

தோல்வியின் அடையாளம் தயக்கம், வெற்றியின் அடையாளம் துணிச்சல்
துணிந்தவர் தோற்றதில்லை, தயங்கியவர் வென்றதில்லை.

வெற்றியை விரும்பும் நமக்குத் தோல்வியைத் தாங்கும் மனம் இல்லை.
தோல்வியைத் தாங்கும் மனம் இருந்தால் அதுவும் ஒரு வெற்றிதான்.

உங்களின் தோல்வி எங்கே ஒளிந்துள்ளது தெரியுமா?
பிரச்சினைகள் வரும்போது அல்ல, பிரச்சினைகளைக் கண்டு நீங்கள்
பயந்து விலகும்போது.

– பாரதியார்

எவையெல்லாம் அழகாக இருக்கின்றனவோ
எவையெல்லாம் அர்த்தத்துடன் இருக்கின்றனவோ
எவையெல்லாம் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருமோ
அவை அனைத்தும் உங்களுக்குக் கிடைக்கட்டும்!
இன்றும் நாளையும் என்றும்.

மின்தடை ஏற்படும்போது தான் நமக்கு மெழுகுவர்த்தி ஞாபகம் வருகிறது.
அப்படித்தான் பிரச்சினைகளின்போது ஒரு நண்பர், தீர்வு என்னும்
விளக்கேந்தி வருகிறார். நான் உனக்கொரு மெழுகுவர்த்தியாக இருப்பேன்
என்ற நம்பிக்கை எனக்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் ஒரு வாய்ப்பைத் தவறவிட்டால் உங்கள் விழிகளைக் கண்ணீரால் நிரப்பாதீர்கள். உங்கள் கண்ணீர் உங்கள் முன் உள்ள இன்னொரு வாய்ப்பை மறைத்துவிடும். அழகிய புன்னகையுடன் எதிர்கொள்ளுங்கள்.

நீ மற்றவருக்கு வழிகாட்டி ஆவதற்காகப் பிறந்திருக்கிறாய்.
ஏன் மற்றவர்களிடம் உன் வழிகாட்டியைத் தேடிக் கொண்டிருக்கிறாய்?
இந்த உலகம் உன் வெற்றிக் கதையைப் படிக்கக் காத்துக் கொண்டிருக்கிறது.

வியர்வைத் துளிகளும் கண்ணீர்த் துளிகளும் உப்பாக இருக்கலாம்.
ஆனால் அவைதான் வாழ்வை இனிமையாக மாற்றும்.

நாம் அனைவரும் ஒரே அளவு திறமை பெற்றவர்கள் இல்லை. ஆனால் நம் திறமையை வளர்த்துக்கொள்ள ஒரே அளவு வாய்ப்புக்களைப் பெற்றிருக்கிறோம்.

– அப்துல் கலாம்.

ஓர் உண்மை
நீ மகிழ்ச்சியாக இருக்கும்போது நீ யாரை விரும்புகிறாயோ
அவரை நினைத்துக்கொள்வாய்.
நீ துயரத்தில் இருக்கும்போது உன்னை யார் விரும்புகிறாரோ
அவரை நினைத்துக் கொள்வாய்!

உங்கள் இதயத்தில் மகிழ்ச்சி
உங்கள் ஆன்மாவில் புத்துணர்வு
உங்கள் வாழ்வில் வெற்றி
உங்கள் முகத்தில் புன்னகை
உங்கள் இல்லத்தில் அன்பின் நறுமணம்
இவை அனைத்தும் உங்களுக்கு என்றும் கிடைக்கட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது அன்புத் தெய்வம்
அமரர்
**காசிப்பிள்ளை அன்னபூரணம்**

அவர்களின் அமரத்துவச் செய்தியறிந்து
உடன் வந்து உதவி செய்தவர்களுக்கும்
தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகளை வெளியிட்டவர்களுக்கும்,
சமூக வளைத்தளங்களுடாகத் துயர் பகிர்ந்தவர்களுக்கும்,
கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்ட அன்பர்களுக்கும்,
வெளிநாடுகளில் எமதில்லம் வந்து ஆறுதல் கூறிய
அன்புள்ளங்களுக்கும், பதாதைகள் கட்டியவர்களுக்கும் அந்தியேட்டி,
வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் பங்குபற்றியவர்களுக்கும்,
உற்றார், உறவினர், நண்பர்கள் பெரியோர்கள்,
அயலவர் அனைவர்க்கும் மற்றும்
ஆத்மசாந்திக் கிரியைகளைச் செய்த குருமாருக்கும்,
நினைவு மலரினை அழகுற அச்சிட்டுத்தந்த நிறுவனத்தினர்க்கும்.

மேலும் ஆத்மசாந்திக் கிரியைகளில் கலந்து கொண்ட
அனைவர்க்கும், தொடர்ந்து மதியபோசனத்தில்
கலந்து சிறப்பித்த அன்பர்களுக்கும்
எமது மனப்பூர்வமான நன்றிகள்.
மற்றும் எவர்க்கேனும் நன்றி கூறத்தவறி இருப்பின்
அவர்களுக்கும் எமது நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.


இல. 576, 6ம் யுனிற்,
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

இங்ஙனம்
குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சவிருத்தி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org